பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

01 08 2025 6 45

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- விவசாயிகள் நலன் மற்றும் உணவுப் பாதுகாப்புக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- மின்சார வாகன உற்பத்தியில் தமிழகம் முன்னணியில் உள்ளதாக மாநில தொழில் துறை அமைச்சர் திரு டிஆர்பி ராஜா தெரிவித்துள்ளார்.
- தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற திமுக அரசு தவறிவிட்டதாக அஇஅதிமுக பொதுச் செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி மீண்டும் குற்றம் சாட்டியுள்ளார்.
- தமிழகத்தில் லாக் அப் மரணங்கள் அதிகரித்துள்ளதாக பிஜேபி மாநில தலைவர் திரு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.
- 17 வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா 2 தங்கம், 2 வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கம் வென்றது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

விவசாயிகள் நலன் மற்றும் உணவுப் பாதுகாப்புக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், உணவு பதப்படுத்தும் துறையை நவீனமயமாக்குவதற்கான திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இது அந்தத் துறையை வலுப்படுத்துவது மட்டுமின்றி விவசாயிகளின் வருவாயை அதிகரிக்கவும் வகை செய்யும் என்றும் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

தேசிய கூட்டுறவு மேம்பாட்டு கழகத்தை வலுப்படுத்தும் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது முக்கியமான நடவடிக்கை என்றும் அவர் கூறியுள்ளார்.

பால் உற்பத்தி துறை உள்ளிட்டவை இதனால் பெரிதும் பயனடையும் என்றும் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் மின் திறனை அதிகரிக்க தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய மின்துறை அமைச்சர் திரு. மனோகர் லால் கூறியுள்ளார்.

தமிழக மின்திட்டங்கள் தொடர்பான கேள்விக்கு மக்களவையில் பதிலளித்த அவர், தற்போது மாநிலத்தின் மின் உற்பத்தி திறன் 43 ஆயிரம் மெகாவாட்டாக உள்ளது என்றார்.

மாநிலத்தில் அடுத்த 3 ஆண்டுகளில் 6 ஆயிரம் மெகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்றார்.

அணுசக்தி திட்டங்கள் மூலம் அடுத்த 3 ஆண்டுகளில் தமிழகம் 2 ஆயிரத்து 150 மெகாவாட் பங்கைப் பெறும் என்று திரு. மனோகர் லால் கூறினார்.

<<<<>>>>

தூய்மை இந்தியா இயக்கத்தின்கீழ் தமிழகத்தில் 60 லட்சம் கழிவறைகள் கட்டப்பட்டுள்ளதாக ஜல்சக்தித்துறை இணையமைச்சர் திரு. சோமன்னா கூறியுள்ளார்.

தமிழகத்தில் இத்திட்டத்தின் செயல்பாடுகள் குறித்த கேள்விக்கு மக்களவையில் பதிலளித்த அவர், அனைத்து ஊராட்சிகளும் திறந்தவெளி கழிப்பிடங்கள் இல்லாத பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

11 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிராமங்களில் திடக்கழிவு மேலாண்மைக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக திரு. சோமன்னா தெரிவித்தார்.

<<<<>>>>

அரசுப் பள்ளிகளின் கல்வித் தரத்தை மேம்படுத்த தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாநில பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி கூறியுள்ளார்.

சென்னை மாவட்ட பள்ளி தலைமை ஆசியர்கள் உடனான ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய அவர், பொதுத் தேர்வுகளில் தேர்ச்சி விகிதத்தை அதிகரிக்க தலைமை ஆசிரியர்கள் மேற்கொண்டு வரும் கற்பித்தலுக்கான புதிய முயற்சிகள் குறித்து கேட்டறிந்தார்.

அரசுப் பள்ளிகளில் 4 லட்சத்துக்கும் அதிகமான மாணவர் சேர்க்கை நடைபெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மாதிரிப் பள்ளிகள், திறன்மிகு வகுப்பறை போன்ற திட்டங்களால் கல்வித் தரம் உயர்ந்துள்ளதாக திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி கூறினார்.

<<<<>>>>

மின்சார வாகன உற்பத்தியில் தமிழகம் முன்னணியில் உள்ளதாக மாநில தொழில் துறை அமைச்சர் திரு டிஆர்பி ராஜா தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மின்சார வாகனங்களுக்கான சார்ஜிங் வசதிகளை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.

கடல்சார் துறையில் அதிக முதலீடுகள் ஈர்க்கப்படும் என்றும் திரு. டி.ஆர்.பி. ராஜா தெரிவித்தார்.

<<<<>>>>

தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற திமுக அரசு தவறிவிட்டதாக அஇஅதிமுக பொதுச் செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி மீண்டும் குற்றம் சாட்டியுள்ளார்.

ராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளத்தில் நேற்று அவர் பிரச்சாரம் மேற்கொண்டார்.

திமுக வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளில் 10 சதவீதம் மட்டுமே நிறைவேற்றப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

மீனவர்களின் நலனுக்கு எதிராக திமுக மற்றும் காங்கிரஸ் கட்சிகள் செயல்பட்டுள்ளதாக அவர் குற்றம் சாட்டினார்.

முந்தைய அஇஅதிமுக ஆட்சிக் காலத்தில் செயல்படுத்தப்பட்ட நலத்திட்டங்களை திமுக அரசு நிறுத்திவிட்டதாக திரு. எடப்பாடி பழனிசாமி குறை கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் லாக் அப் மரணங்கள் அதிகரித்துள்ளதாக பிஜேபி மாநில தலைவர் திரு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், திருப்பூர் மாவட்டத்தில் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டவர் உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியளிப்பதாக தெரிவித்துள்ளார்.

திமுக ஆட்சியில் இதுபோன்ற மரணங்கள் பெருகி வருவதாகவும், ஒட்டுமொத்த அரசு இயந்திரமும் இதை மூடி மறைக்க முயற்சிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என்றும், இவ்வழக்கின் விசாரணையை சிபிசிஐடி-க்கு மாற்ற வேண்டும் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

நாகப்பட்டினத்தில் புத்தக கண்காட்சி இன்று தொடங்குகிறது.

வரும் 11ஆம் தேதி வரை நடைபெற உள்ள இந்தக் கண்காட்சியை ஒட்டி பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் திரு. ஆகாஷ் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

சீனாவில் கன மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் 44 பேர் உயிரிழந்தனர்.

<<<<>>>>

மியான்மரில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 4 புள்ளி 9ஆக பதிவானது.

<<<<>>>>

உலக தாய்ப்பால் வாரம் இன்று முதல் வரும் 7ஆம் தேதி வரை கடைபிடிக்கப்படுகிறது.

<<<<>>>>

ராஷ்டிர சேவிகா சமிதியின் தலைமை நிர்வாகி பிரமிளா மேதேவின் மறைவுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தேசிய மாணவர் படையின் தலைமை இயக்குநர் திரு குர்பிர்பால் சிங், தமிழக ஆளுநர் திரு ஆர்.என். ரவியைச் சந்தித்துப் பேசினார்.

<<<<>>>>

கதர் தொடர்பான விழிப்புணர்வை அதிகரிக்கும் நோக்கில் மதுரையில் கதர் மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையம் சார்பில் மாரத்தான் மற்றும் ரத்த தான முகாம் நடைபெற்றது.

<<<<>>>>

சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள சட்டத்துறை நூலகத்தில், மின் நூலகத்தை மாநில சட்ட அமைச்சர் திரு. துரைமுருகன் தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

காஞ்சிபுரம் அருகே திம்மசமுத்திரம் பகுதியில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமை மாநில அமைச்சர் திரு. காந்தி பார்வையிட்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

<<<<>>>>

கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசின் வளர்ச்சி திட்டப்பணிகளை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு. ஹனீஷ் சாப்ரா மற்றும் ஆட்சியர் திருமதி அழகு மீனா ஆய்வு செய்தனர்.

<<<<>>>>

சென்னை கொடுங்கையூர் குப்பை கிடங்கில் அடுத்த இரண்டு வாரங்களில் திடக் கழிவுகளை அகற்றி ஒரு ஏக்கர் நிலம் மீட்கப்படும் என்று மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

17 வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா 2 தங்கம், 2 வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கம் வென்றது.

கிரீசின் ஏதென்சில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 43 கிலோ எடைப்பிரிவில் **Rachana**-வும், 57 கிலோ எடைப்பிரிவில் **Ashvini**-யும் தங்கப் பதக்கம் வென்றனர்.

57 கிலோ எடைப்பிரிவில் மோனியும், 73 கிலோ எடைப்பிரிவில் காஜலும் வெள்ளிப் பதக்கம் வென்றனர்.

49 கிலோ எடைப்பிரிவில் கோமல் வெண்கலப் பதக்கம் வென்றார்.

<<<<>>>>

**Macau** ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 10-21, 22-20, 21-16 என்ற செட் கணக்கில் ஜப்பானின் **Kumagi – Nishi** இணையை வென்றது.

<<<<>>>>

சவுதி அரேபியாவின் ரியாதில் நடைபெற்று வரும் சர்வதேச செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் அர்ஜுன் எரிகேசி அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

<<<<>>>>